CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
මැතිවරණ ප්‍රචණ්ඩත්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

No 17A, Pedris Road, Colombo 3, Tel: **011 3010662-4**, Fax: **011 2577117**
**E-mail**: cmev@cpalanka.org **Web**: www.cmev.org

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் 2015

## விசேட ஊடக அறிக்கை

**31 ஜுலை 2015, கொழும்பு, இலங்கை**

இன்று காலை 11.30 அளவில், கொட்டஹேனாவில் சென்.பெனடிக்ட் கல்லூரி மைதானத்திற்கு முன்னுள்ள புளுமென்டால் வீதியில் ஒரு சூட்டுச் சம்பவம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் பரப்புரைகளுக்கான முகாமையாளர் ராஜீவ் செனிவிரத்ன கட்சியின் தலைமை அலுவகத்திலிருந்து தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு (தே.வ.க.நி) பேசுகையில் திரு.ரவி கருணநாயக்க, அவரது ஆதரவாளர்களுடன் பிரச்சாரங்களை மேற்கொண்டிருந்த வேளையில் சம்பவம் நிகழ்ந்துள்ளதாக உறுதிப் படுத்தினார். தாக்குதலில் அமைச்சர் காயமடையவில்லை. சம்பவம் நடைபெற்ற வேளையில் 500 பேர்கள் பிரசன்னமாக இருந்ததாகவும் அறிவிக்கபட்டுள்ளது. இதில் ஒருவர் உயிரிழந்தும், 12 ஆதரவாளர்கள் காயமடைந்து, 5 பேர்கள் கடுங் காயங்களுக்குள்ளாகி தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளதாகவும் தே.வ.க.நி உறுதிப்படுத்துகிறது.

உயிரிழந்தவரின் பெயர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு ஆதரவாளரான, மாதம்பிட்டி, கொழும்பு 15 ஐ சேர்ந்த திருவாட்டி. எஸ். மஹீமா என அறிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதல் 10 நிமிடங்கள் வரை நீடித்தது. தாக்குதலை மேற்கொண்டவர்கள் கறுப்பு உடைகள் தரித்திருந்ததாகவும் மற்றும் வாகன இலக்கத் தகடுகளற்ற இரண்டு கறுப்பு நிற ஹைபிரிட் கார்களில் வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பொலிஸ் தகவல்களின் படி, சம்பவ இடத்தில் 16 துப்பாக்கி ரவைக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் (தே.வ.க.நி), தேர்தல் வன்முறைகள் தொடர்பான சம்பவங்களைக் கண்காணிப்பதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் ஒரு சுயாதீன மற்றும் கட்சிச் சார்பற்ற ஸ்தாபனமாக அரசியல் வன்முறைகளுக்கெதிரான ஒரு கூட்டமைப்பு என்பவற்றினால் 1997 இல் உருவாக்கப்பட்டது. தற்போது, தே.வ.க.நி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், இன்போரம் மனித உரிமைகள் ஆவண நிலையம் என்பவற்றால் உருவகிக்கப்படுகிறது.

**தே.வ.க.நி இன் அனைத்து அறிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் என்பன ஒன்லைனில் www.cmev.org எனும் முகவரியில் அணுகப்பட முடியும்.**



கலாநிதி. பா.சரவணமுத்து
இணை அமைப்பாளர்